# கவிஞர் சக்தி ஜோதி கவிதைகளில் கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்

***வெ. வளர்மதி***
(MKU23PFOL11214), பகுதிநேரமுனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலைத்தமிழாய்வுத்துறை
தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி
சிவகாசி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பல்கலை நகர், மதுரை

***முனைவர் ச. தனலட்சுமி***
உதவிப்பேராசிரியர், முதுகலைத்தமிழாய்வுத்துறை
தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பல்கலை நகர், மதுரை
https://doi.org/10.5281/zenodo.15323794

***ஆய்வுச் சுருக்கம்***

*நவீன தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான குரலாக வலம்வரும் கவிஞர் சக்தி ஜோதியின் கவிதைகளில் காணப்படும் கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமைகளை ஆராய்கிறது. இவரது எழுத்தில் காதல், காலச்சுழற்சி, மொழி நடை, உருவகப் பாவனை, சூழலியல் பெண்ணியம், தத்துவ உணர்வு, இயங்கியல் மற்றும் வாழ்க்கைச் சுழற்சி எனப் பல்வேறு பரிமாணங்களில் புதுமை நிறைந்த அணுகுமுறைகள் வெளிப்படுகின்றன. கவிஞரின் கவிதை நடை, மொழியின் இயல்பை மீறிய புதுமையோடும், தீவிரமான வாழ்க்கை அனுபவங்களின் பிரதிபலனாகவும் அமைந்துள்ளது. இதில், மரபுவழி இலக்கியத்தையும், பிந்தைய கவிஞர்களின் பங்களிப்புகளையும் ஒப்பிட்டு அவற்றின் இடைவேறுகளை வெளிக்கொண்டு வருவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

*தமிழ்கவிதை இலக்கியத்தில் சக்தி ஜோதி ஒரு தனித்துவமான கவிஞராக திகழ்கிறார். அவரது கவிதைகள் புதுமை, கண்டுபிடிப்பு, சமூக விமர்சனம், இயற்கை உணர்வு, உளவியல், நவீனத்துவம், மற்றும் தத்துவ நிலைமைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. அவரது கவிதைகள் வழியாக சமூக மாற்றங்கள், மனித மனப்பான்மைகள், தொழில்நுட்ப வளர்ச்சி, காதல், பிரிவு, இயற்கை விவரணம், மற்றும் மனித வாழ்க்கைப் போராட்டம் ஆகியவை புதுமையான பிம்பங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.. சக்தி ஜோதி தனதுகவிதைகளில்நவீனபிம்பங்களை,புதிய உவமைகள், மற்றும் ஆழமான உளவியல் அனுபவங்களை தனித்துவமாகக் கொண்டு புகுத்திவருகின்றார். அவரது கவிதைகள் நவீனத்துவமும், தத்துவமும், மற்றும் அறிவியலும் கலந்த புதுமையான பிம்பங்களால் அழகுற விளங்குகின்றது.. சமூகத்தில் காணப்படும் எதிர்மறை மாற்றங்களை அவர் புதிய உருவகங்களை கொண்டு வெளிப்படுத்துகிறார். கவிஞர் சக்தி ஜோதி 13 கவிதை தொகுப்புகளையும் இரண்டு கட்டுரை தொகுப்புகளையும்எழுதியுள்ளார் இவற்றில் எனக்கான ஆகாயம், பறவை தினங்களைப் பரிசளிப்பவள் இப்போது வளர்ந்து விட்டாள், உப்பின் ரகசியம் ஆகிய நான்கு கவிதை தொகுப்புகள் மட்டுமே கட்டுரைக்கு ஆயவு எல்லையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

**காதல்**

*காதல் உணர்வினை பயணத்தை மேற்கொள்ளும்போது கிடைக்கின்ற அனுபவ உளவியல்அடிப்படையில் சித்த்திரிக்கிறார். தார்ச் சாலையும் வாகனப் போக்குவரத்தும் கவிதையின் உள்வடிவமாக மாறி, நவீன உலகின் வேகத்துடனான மனிதமனநிலையை பிரதிபலிக்கின்றன. இங்கு பயணம் வெளிப்படையாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் பொருட்டாக அல்ல, உணர்வுப் பயணமாக மாறுகிறது. பயணம் முடிவடைய வில்லை என்ற உணர்வு, விடுபடும் வாகனங்கள், நினைவுகளின் சிறைச்சாலை ஆகியவை புதிய வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.*

***பகல் பிரயாணத்திலும் உன் மௌனத்தாலும்***
***களைப்படைந்திருக்கிறேன்***
***வாகனத்தை***
***முந்திச் செல்லும் வாகனங்களால்***
***விடுபடுகிறேன் உன் நினைவுகளிலிருந்து***
***தார்ச்சாலையில்***
***எனது வாகனம் செல்கிறது***
***முற்றுப்பெறாத பயணத்தை நோக்கி***
***இனிவரும் மாலை பொழுது***
***இனிவரும் இரவு***
***இனிவரும் நட்சத்திரங்கள்***
***இனிவரும் அலைபேசியான உனது குரல்***
***(சக்தி ஜோதி,எனக்கான ஆகாயம்,ப.35)***

*என்ற கவிதையில் நகர்ப்புற வாழ்க்கை, வாகனங்கள், பயணம், அலைபேசி, நினைவுகள் ஆகியவற்றை இணைத்து, பாரம்பரியக் காதல் கவிதைகளை விட வித்தியாசமான அணுகுமுறையை வெளிப்படுத்தியுள்ளார். இது காதலின் ஆழமான தனிமையை நேரடி உருவகங்களால் பரப்பும் புதுமையான கவிதையாகும். இக்கவிதை போன்றே*

***பெற்றோர் மீது வைக்கிறதும் காதல் தாங்க, அதை***
***பாசமுண்ணு பண்போடு சொல்றோமுங்க***
***மனைவி மக்களை பார்க்கிறதும் காதல் தாங்க,***
***நேசம் என்று நேர்மையா சொல்றோமுங்க***
***(காதர், தமிழர் பெருமை,ப.27)***

*என்ற கவிதை வழியாக காதர் வெளிப்படுத்தியுள்ளார் காதல் என்பது பெற்றோரின் மீது பாசமாகவும் மனைவி மக்களைப் பார்க்கும் போது நேசமாகவும் மாறுகின்றது.*

**காலச்சுழற்சி**

*ஒருவரின் வாழ்க்கை, உறவு, நிகழ்ச்சிகள், மறைவு, பின்னும் அவரைச் சூழ்ந்த நினைவுகள் ஆகியவற்றை அற்புதமாக இணைக்கிறது. இது மகிழ்ச்சியிலிருந்து வெறுமை, உயிர்ப்பிலிருந்து நினைவுச் சிற்பம், ஒளியிலிருந்து இருள் ஆகிய எதிர்மறை உணர்வுகளின் மாறுதல்களை உள்ளடக்கியது. இதனை சக்தி ஜோதி தனது கவிதைகளில் வலுவாக வெளிப்படுத்துகிறார்..*

***பட்டுடையில் மின்னியவாறு***
***புன்னகை பூத்தவளை***
***உறவென்று அறிமுகப்படுத்தினார்கள்***
***அதன் பிறகு***
***திருவிழாக்களும்***
***தேரோட்டமும்***
***பூப்பல்லாக்கும்***
***வருடந்தோறும் வந்து போகிறது அவள் இல்லாமல்***
***தூண்களில் மறைந்து கை வளையல்கள் குலுங்கிச்***
***சிரிப்பவள்***
***இப்போது சிற்பம் என***
***ஆயிரம் தீபங்களின் நடுவே***
***வெற்றிடத்தில்***
***விளக்கொன்று அணைத்து***
***கருகும் வேளையும்***
***விளக்கு ஒன்று சுடர் விட்டு***
***ஒளிரும் வேளையும்***
***அருகருகே***
***(சக்தி ஜோதி, எனக்கான ஆகாயம்,ப..40)***

*என்ற கவிதை வரிகளில்மரபு மற்றும் காலச்சுழற்சி, நினைவுகளின் உருவாக்கள், உறவுகளின் நிலைமாற்றம், ஒளி - இருள் முரண்பாடு ஆகியவற்றைப் புதுமையாகக் கோர்த்து கவிதை வடிவமைத்திருக்கிறது. ஒரே நேரத்தில் வாழ்வின் தொடர்ச்சி, பிரிவு, நினைவின் நிலைமாற்றம், வெற்றிட உணர்வு ஆகியவை ஒருங்கே வெளிப்படுகின்றன. இதே சூழ்நிலையே,*

*குடும்ப வாழ்வு அன்பில்லாமல் சீரழிஞ்சு போச்சு குளோனிங் முறையிலே உலகினிலே குழந்தை பெறலாச்சு*

***அடுப்படியில் வேலை செய்த காலம் மாறி போச்சு***
***ஆபிசிலே பெண்கள் எல்லாம் வேலை செயலாச்சு***
***(காதர், தமிழர் பெருமை,ப.39)***

*என்ற கவிதை வரிகளில் காலம் மாறியதால் ஏற்பட்ட விளைவினைக் கவிஞர் காதர் கூறுகிறார்.*

### மொழிநடை

*கவிஞர் சக்தி ஜோதி கவிதைகளில் சிறப்பான மொழிநடை காணப்படுகிறது. அவரது எழுத்து ஓர் உரையாடல் போன்று அமைந்திருக்கும். எளிமையான சொற்கள், ஆழமான உணர்வுகளுடன் இணைந்து கவிதைகளின் தாக்கத்தை அதிகரிக்கின்றன. கவிதை பெண்ணுரிமை, சமூக கட்டுப்பாடுகள், பாசிசமான அடக்குமுறைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. பெண்கள் தங்களது இயல்பான உரிமைகளை இழக்கும் விதங்களைச் செறிவாகக் காண்பிக்கிறது. ஒவ்வொரு உடல் உறுப்பும் ஒரு பச்சைஉரிமையை குறிக்கின்றது, ஒவ்வொரு பறிப்பும் ஒரு கட்டுப்பாட்டைக் காட்டுகிறது. இதனை*

***நான் பெண்ணாய் பிறக்கும்போது***
***பறித்துக் கொண்டார்கள்***
***அல்லது***
***செயலிழக்கச் செய்தார்கள்***
***கால்களை***
***கரங்களை***
***கண்களை***
***செவிகளை***
***நாவைப்***
***புலன்களை***
***மேலும் பார்க்க இயலாத சிறகுகளை***

***(சக்தி ஜோதி, எனக்கான ஆகாயம், ப.45)***

*என்ற கவிதை வரிகளில் மொழிநடை மிகுந்த உணர்ச்சி மிகுந்த எதிரொலிப்புடன், கவிக்கோபமும் சமூக விமர்சனமும் நிறைந்த ஒரு நேரடியான வெளிப்பாடாக அமைந்துள்ளது. இக்கவிதையின் மொழிநடை கடினமான உணர்வுகளால் துளிர்க்கும் தாக்கத்துடன், நேரடியாக உள்ளது. இது சமூகத்தின்மீது மிகுந்த உணர்ச்சி மிக்க மொழி தாக்கத்தைக் கொண்டதாகவும், நவீன பெண்ணியக் கவிதைகளில் எழுச்சியை தரக்கூடியதாகவும் அமைந்துள்ளது.*

***உண்ண உணவின்றி உடுக்க துணியின்றி***
***வாழும் மனிதரை அது- வாழ்வை***
***எண்ண் வழியின்றி வறுமையில் வாடும் மனிதனின் தேவை அது;மனிதனின் தேவை அது; தானத்தில் சிறந்தது -அன்னதானம்***

***(காதர், தமிழர் பெருமை,ப.50)***

*என்ற வரிகளில் உணவின் முக்கியத்துவத்தை எளிய நடைகளில் கூறுகிறார்.*

### உருவகப் புதுமை

*ஒரு பெண் குழந்தையின் வளர்ச்சி பற்றி சொல்லும்போது சாதாரணமாக அவளின் வெற்றிகளை பேசுவோம். ஆனால் இங்கே வளர்ச்சியைக் கட்டுப்பாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு இழப்பாக காட்டுவதே புதுமையான அணுகுமுறை. பெண்ணின் வளர்ச்சியையும், சமூக கட்டுப்பாடுகளால் உருவாக்கப்படும் உள்ளுணர்வுத் தனிமையையும் வெளிப்படுத்துகிறது.*

***அளவாகச் சிரிப்பதும்***
***பொங்கும் கண்ணீரை***
***தனக்குள் புதைத்துக் கொள்வதற்கும்***
***பழக்கப்பட்டுவிட்ட தன்னுடைய மகள்***
***இழந்த குழந்தைமையில்***
***அம்மா தொலைந்து இருந்தாள்.***

***(சக்தி ஜோதி, இப்போது வளர்ந்து விட்டாள், ப.45)***

*என்ற வரிகளில் இது பெண்ணின் உளவியல் வளர்ச்சி, சமூக கட்டுப்பாடுகள், மற்றும் உள்ளுணர்வுப் போராட்டங்களை புதுமையான அணுகுமுறையில் வெளிப்படுத்துகிறார்.*

### சூழலியற் பெண்ணியம்

*உலகம் முழுவதும் இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டு வருவதை கலை இலக்கியங்கள் மறுக்க வேண்டும் எனும் குரல்கள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒலிக்கத் தொடங்க அவை இலக்கியத்திலும் திறனாய்விலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. 1990இல் "செரில்கிலாட்பெல்டி" இலக்கியத்திற்கும் சூழலில் இருக்கும் ஆன உறவை* "The Eco Criticism Reader: Landmarks in Literary Ecology' *என்ற நூல் மூலம் புதுப்பித்தார் அவரை தொடர்ந்து டேவிட் பார்சல் லாரன்ஸ் பவுல்மெர்சல் போன்றோர் இக்கொள்கை பரவுவதற்கு காரணமாக இருந்தனர் நவீன கவிதைகளில் மேற்கின் தொழில் புரட்சியும் நகரமயமாதலும் மனிதனை அந்நியமாக்கி இருப்பதை வாசித்து மனிதர்களை இவர்கள் அமைத்தனர்*

*(ந.ரத்தினகுமார், திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும், பல. 25)*

*இயற்கை மற்றும் மனித உணர்வுகளின் ஒற்றுமை, அதற்குள் இருக்கும் ஒரு தனிமை உணர்வு, மனிதருக்குப் பிடிக்க முடியாதவைகளைப் பற்றிய தரிசன உணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்தும் பெண் பாத்திரம் நகரமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றிக்கு எதிராக, இயற்கையோடு இணைந்திருக்க விரும்புகிறாள். அவள் உலகத்தின் அலை பேசல்கள், கலகங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றிலிருந்து மௌனத்தின் மெய்யுணர்வை கற்றுக் கொண்டிருக்கிறாள்.*

***அந்த நாட்களில்***
***தூண்டிலில் சிக்காத***
***மீன்களுடன் சுழன்றிருக்கிறாள்***
***பச்சைத் தாவரங்களில்***
***ஒளிர்ந்திருக்கிறாள்***
***பொங்குகிற கடலின் அழைப்பைப்***
***புரிந்து இருக்கிறாள்***
***அருவியின் ஓசையில்***
***மௌனம் பழகியிருக்கிறாள்***
***பறவைகளிடம் மிதத்தலையும்***
***வானத்தின் விரிவையும் அறிந்திருக்கிறாள்***
***(சக்தி ஜோதி இப்போது வளர்ந்து விட்டாள், ப.44)***

*என்ற கவிதை வரிகளில் ஒரு பெண்ணின் உளவியல் வளர்ச்சி, சமூகத்திலிருந்து விலகுதல், இயற்கையோடு இணைந்திருப்பதன் மூலம் விடுதலையை அடைதல் போன்ற முக்கியமான கண்டுபிடிப்புகளை புதுமையாக வெளிப்படுத்துகிறது.*

***இது பெண்ணியக் கவிதைகளில் தனித்துவமான அணுகுமுறை,***
***சமூகத்திலிருந்து இயற்கை ஓர் இடமாக மாறும் தருணம்,***

*கட்டுப்பாடுகள் உடைந்ததில் பெறும் அமைதி ஆகியவற்றைக் கவிதை அழுத்தமாகக் கூறுகிறது.*

### அனுபவத்தில் தத்துவத்தின் புதுமை

*உப்பு என்பது வாழ்க்கையின் கடின அனுபவங்களின் அடையாளம்.நீரில் உப்பு கரைந்து மறைந்து விடும், ஆனால் அதன் சுவை மட்டும் நீரில் இருக்கிறேன் அதேபோல், மனிதர்களின் வாழ்க்கையிலும் கடந்து சென்ற அனுபவங்கள் மறைந்தாலும், அவற்றின் தாக்கம் இருப்பதைப் புரிய வைக்கிறது. வாழ்க்கையின் வரலாறு மறைந்தாலும் அனுபவங்கள் நிலைக்கின்றன எனும் புதிய கோணத்தை இது வெளிப்படுத்துகிறது.*

***நீரெல்லாம் நதி வழியே***
***நதியெல்லாம்***
***கடலின் மடியில்***
***கடல் மட்டும்***
***நிலத்தின்***
***ரகசியங்களைத்***
***தன்னுள்***
***பொதிந்து கொள்கிறது***
***உப்பென***
***நதியென்பது***
***வார்த்தைகளற்ற கணத்தில்***
***துளி கண்ணீரும் தான்***
***என்பதை யறிவார் அறிவார்***
***உப்பின் சாரத்தை***
***(சக்தி ஜோதி, உப்பின் ரகசியம், ப.34)***

*கவிதை மனித உணர்வுகளையும், இயற்கையின் மாறுதல்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு புதுமையான அணுகுமுறையை கொண்டுள்ளது. நதி = கண்ணீர், கடல்= மறைந்த உணர்வு, உப்பு = வாழ்வின் மிச்சம் என்ற கோணங்கள் மூலமாக கவிஞர் ஒரு புதிய தத்துவத்தைக் கண்டுபிடிக்கிறார்*

*நீரும் கண்ணீரும் ஒன்று என்பதே கவிதையின் மையப் புதுமை. இதன் மூலம் வாழ்க்கையின் அடுக்குகளை வெளிப்படுத்தும் வலுவான கவிஞர் அழுத்தமாக பயன்படுத்தி யிருக்கிறார்.*

***எங்கிருந்தோ வருகின்றன***
***தும்பியும் ஈசலும்***
***கரும்சிவப்பு வண்ணஅட்டையும்***
***ஈர நச நசப்பில்***
***சடுதியில் குடை விரிகிறது காளான்***
***மழைக்குக் காத்திருந்து இயல்பு கொள்கிறது மண்***
***(சல்மா, பச்சைத்தேவதை, ப.22)***

*என்ற வரிகளில் நினைவுகளின் நிலையின்மை, உறவுகளின் மாறுபாடு, மற்றும் வாழ்க்கையின் பொறுமை இல்லாத தன்மை ஆகியவற்றை இயற்கை உருவகங்களால் அழகாக வெளிப்படுத்துகிறது. மழை, மண், மற்றும் நீர்க்குமிழிகள் மூலமாக மனித வாழ்க்கையின் கவிஞர் உரையாடுகிறார்.*

**இயங்கியல் கண்டுபிடிப்பு**

*இயங்கியல் என்பது பொருட்கள் எப்படி நகர்கின்றன, எந்த விசை அவற்றை நகர்த்துகிறது, எப்போது நிற்கின்றன போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கும் அறிவியல் வகை ஆகும். ஒரு பந்து தரையில் உருட்டப்படும்போது அது இயங்குகிறது. அதை உருட்ட நீங்கள் கையில் விசையைப் பயன்படுத்துகிறீர்கள். பந்து ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்கிறது. இதுதான் இயங்கியல்.*

*இயற்கையின் வளர்ச்சி, மாறுபாடு, மற்றும் அதனுடனான உயிர்களின் தொடர்பை புதிய கோணத்தில் வெளிப்படுத்துகிறது.. விதை, துளிர்ப்பு, காற்றின் தாக்கம், இலை உதிர்தல் போன்ற நிகழ்வுகளை கவிஞர் பிரபஞ்சத்தின் இயற்கை மாறுதல்களாக மட்டுமல்ல, மனித வாழ்வின் தருணங்களாகவும் ஒப்பிடுகிறார்.*

***விதையிலிருந்து***
***மண்ணைக் கீறி***
***தன்னைத் திறக்கும்***
***பச்சை இலையின்***
***துளிர்ப்பும்***
***காற்றின்***
***கிறுக்குத்தனமான உலுக்கலுக்கு***
***நெடுமரத்திலிருந்து***
***உதிர்ந்து***
***தரை தொடும்***
***பழுப்பிலையும்***
***இயற்கையின்***
***இயங்கியலைத்***
***தன் போக்கில்***
***சொல்லி விடுகின்றன***
***கணந்தோறும்***

***(சக்தி ஜோதி உப்பின் ரகசியம், ப.42)***

*வாழ்க்கையில் ஒரு புதிய கட்டத்தை அடைய, சந்திக்க வேண்டிய சவால்களை, மண்ணைக் கீறுவதைப் போலவே தன்னை விடுதலை செய்ய வேண்டிய கட்டாயத்தை இது உணர்த்துகிறது. வளர்ச்சி என்பது வலியுடன் வருகிறது ஆனால் அது புதிதாக உருவாகும் நிலையை உருவாக்கும் என்பதையும் சொல்லுகிறது.காற்றுகடுமையாகவீசும்போதும், மென்மையாகத் தழுவும்போதும், வாழ்வின் அனுபவங்களைப் போன்றே மாறுபடும். வாழ்க்கையில் நாம் எதிர்படும் எதிர்பாராத மாற்றங்களைக் குறிக்கிறது. இதன் புதுமை என்னவெனில், காற்றை இயற்கைத் தன்மையாக மட்டுமல்ல, வாழ்க்கையின் பரிமாணங்களாகவும் கவிஞர் கருதுகிறார். வாழ்க்கை நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கலாம், புதிய பாதைகளில் தள்ளலாம், ஆனால் நம்மை முழுமையாக அழிக்காது என்பதற்கான உருவகமாக இது செயல்படுகிறது.*

***இந்தக் கவிதை போன்றே***
***இருளில்***
***மிதிபட்டு நசுங்கிக்***
***கூழாகியகரப்பானின்தசையை***
***இரவெல்லாம் உருவிய எறும்புகள்***
***விட்டுச் சென்றிருக்கின்றன***
***மேலெழவியலாத சிறகுகளையும்***
***வேண்டியிராத குச்சிக்கால்களையும்***
***வெகு நூதனமாய்***
***என்னை எனக்கு காட்டவென***

***(சல்மா,பச்சைத் தேவதை,ப76)***

**வாழ்வின் சுழற்சி**

*மாண்பும் மலர்வும் கொண்ட வாழ்க்கை ஒரு நிலையான மாறுபாட்டிற்குள் எப்படி புகுந்துவிடுகிறது என்பதை உணர்த்துகிறது. கவிஞர் வயல்களிலும் கழனிகளிலும் உற்சாகமாக இருந்த ஒரு மனிதர், முதுமையின் தனிமைக்கு அடிமையாகி விடும் நிலையைக் கண்டுபிடிப்பாக வெளிப்படுத்துகிறார்.*

***வயல்வெளிகளில்***
***காடு கழனியில்***
***ஆடுமாடுகளோடு***
***குழந்தைகளோடு தான் பொழுதைப் பகிர்ந்திருந்தவள்***
***இப்போது முதுமையின் தனிமைக்குத்***
***தன்னை ஒப்புக் கொடுத்திருக்கிறாள்***
***தன்னுடைய இயங்கு பருவத்தின் சுழற்சியில்***
***மனம்லயித்திருக்க***
***தனதிந்த தினத்தின் திறவுகோலாக***
***ஓய்வு நாளிலிருக்கும் தன் மக்களிடமிருந்து***
***தொலைபேசி அழைப்பை***
***எதிர்பார்த்திருந்தாள்***

***(சக்தி ஜோதி, பறவை தினங்களைப் பரிச ளிப்பவள், ப.25)***

இந்த வரிகளில் நவீன சமூக மாற்றங்களும், முதுமை நிலையும், தனிமையின் உணர்வுகளும் புதுமையான உருவகங்களால் வெளிப்படுத்துகிறது. முதுமை, தனிமை, குழந்தைகளின் தொலைவு, தொழில்நுட்பத்தின் தாக்கம் ஆகியவை இதில் அழுத்தமாக வெளிப்படுகின்றன.

இது மனித வாழ்வின் மாற்றங்களை சமூக-உளவியல் நோக்கில் கண்டுபிடிக்கும் கவிதையாக அமைந்திருக்கிறது.

**தொகுப்புரை**

காதலின் ஆழத்தை, நேரடியான தனிமையை உருவங்களால் புதுமையாக வெளியிடுகிறார்..

காலச்சுழற்சியில் மகிழ்ச்சியிலிருந்து வெறுமை, உயிர்ப்பிலிருந்து நினைவுச்சிற்பம், ஒளியிலிருந்து இருள் ஆகிய எதிர்மறை உணர்வுகளின் மாறுதல்களை வெளிப்படுத்துகிறார்.

கவிஞர் சக்தி ஜோதி கவிதைகளில் சிறப்பான மொழிநடை காணப்படுகிறது. அவரது எழுத்து ஓர் உரையாடல் போன்று அமைந்திருக்கும்.

எளிமையான சொற்கள், ஆழமான உணர்வுகளுடன் இணைந்து கவிதைகளின் தாக்கத்தை அதிகரிக்கின்றன.

பெண்ணின் வளர்ச்சியையும், சமூக கட்டுப்பாடுகளால் உருவாக்கப்படும்

உள்ளுணர்வுத் தனிமையையும் உருவகப் புதுமையில் கூறுகிறார். ஒரு பெண்ணின் உளவியல் வளர்ச்சி, சமூகத்திலிருந்து விலகுதல், இயற்கையோடு இணைந்திருப்பதன் மூலம் சூழலியற் பெண்ணியத்தைக் கூறுகிறார்.

வாழ்க்கையின் வரலாறு மறைந்தாலும் அனுபவங்கள் நிலைக்கின்றன எனும் புதிய கோணத்தை இது வெளிப்படுத்துகிறது. இயற்கையின் வளர்ச்சி, மாறுபாடு, மற்றும் அதனுடனான உயிர்களின் தொடர்பை புதிய கோணத்தில் வெளிப்படுத்துகிறார்.

முதுமையில் தனிமை தகவல் தொழில்நுட்பமாகிவிடும் நிலையைக் கவிஞர் சக்தி ஜோதி குறிப்பிடுகிறார்.

**துணை நூற்பட்டியல்**


1. சக்தி ஜோதி, எனக்கான ஆகாயம், வம்சி புக்ஸ், 19, டி.எம். சாரோன் திருவண்ணாமலை
2. கலையூர் ஷே.அ. காதர், தமிழர் பெருமை, நான் சில ஆப்செட் பிரிண்டர்ஸ், 67/1 கோர்ட்ரோடு நாகர்கோயில்.
3. சக்தி ஜோதி, இப்போது வளர்ந்து விட்டாள், டிஸ்கவரி புக் பேலஸ், 6, மகாவீர் காம்ப்ளக்ஸ் முதல் தளம், முனுசாமி சாலை மேற்கு கே .கே. நகர், சென்னை
4. சக்தி ஜோதி, உப்பின் ரகசியம், தமிழ்வெளி, 1-பாரதிதாசன் தெரு சீனிவாசன் நகர், மலையம்பாக்கம், சென்னை
5. சக்தி ஜோதி, பறவை தினங்களைப் பரிசளிப்பவள், வம்சி புக்ஸ், 19, டி.எம். சாரோன் திருவண்ணாமலை
6. சல்மா, பச்சைத் தேவதை, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், 669, கே..பி சாலை.